செப்டம்பர் – 19

# TNPSC துளிகள்

- இந்திய வாகன ஆராய்ச்சிச் சங்கத்தின் (ARAI) புனேவின் தக்வேயில் உள்ள வசதி ஆனது உயர் அழுத்த சிலிண்டர்/உருளைக் கொள்கலன் பரிசோதனைக்காக வேண்டி சோதனை மற்றும் அளவுத் திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
    - ARAI ஆனது 1966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது, அதே நேரத்தில் NABL என்பது சோதனை மற்றும் அளவுத் திருத்த ஆய்வகங்களுக்கான இந்தியாவின் தேசிய அங்கீகார அமைப்பாகும்.
- ஈரானிய அரசு தரப்புடன் தொடர்புடையதும், வாட்ஸ்அப் மற்றும் டெலிகிராமில் ஸ்பியர்-ஃபிஷிங் இணையவழி மோசடி முறை குறித்த பிரச்சாரங்கள் மூலம் பயன்படுத்தப் படுவதுமான சோசன் பிரிக் (CHOSEN BRICK) என்ற உளவு மென்பொருள் குறித்து இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து ஒரு கூட்டு ஆலோசனையை வெளியிட்டன.
    - இந்த ஸ்பைவேரால்/உளவுமென்பொருளால் மின்னஞ்சல்கள், செய்திகள் மற்றும் தொடர்புப் பட்டியல்களைத் திருடவும், திரைகளைப் படம் பிடிக்கவும், சமூக ஊடகக் கணக்குகளை அணுகவும் மற்றும் சாதனத்தின் மைக்ரோ ஃபோனை / மின்சார ஒலிபெருக்கியைப் பயன்படுத்தவும் முடியும்.
- ஒபியோபோகன் ஜபோனிகஸ் (Ophiopogon japonicus) என்பது இந்தியாவில் முதல் முறை ஆக அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு காமெங் மாவட்டத்தில் பதிவு செய்யப் பட்டு உள்ளது; இது பொதுவாக குள்ள லில்லிடர்ஃப் அல்லது மாண்டோ புல் என்று அழைக்கப் படுகிறது மற்றும் இது ஒரு பசுமையான வற்றாத தாவரமாகும்.
    - ஒபியோபோகோனிஸ் ரேடிக்ஸ் (Ophiopogonis Radix - மைடாங்) என்று அழைக்கப் படும் அதன் கிழங்கு வேர்கள் பாரம்பரிய சீன மருத்துவத்தில் பயன்படுத்தப் படுகின்றன.
- ஸ்கிசோபைகோப்சிஸ் வாடெல்லி (Schizopygopsis waddellii) இந்தியாவில் முதல் முறையாக அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங்கில் உள்ள பாங்காங் டெங் த்சோ ஏரியில் பதிவு செய்யப் பட்டுள்ளது.
    - இது 'ஸ்னோட்ரவுட்'/பனிக்கெண்டை (snowtrout) வகையைச் சேர்ந்த, சைப்ரினிடி (Cyprinidae) குடும்பத்தைச் சார்ந்த, குளிர்ந்த சூழலுக்கு ஏற்ற ஒரு நன்னீர் மீன் ஆகும்.
- MG ஹெக்டர் டோமாஹாக் (MG Hector Tomahawk) என்பது இந்தியாவின் முதல் பிரதான பிளக்-இன் கலப்பின மின்சார வாகனம் (PHEV) SUV (விளையாட்டு மற்றும் பயன்பாட்டு வாகனம்) ஆகும்.
    - PHEV என்பது பெட்ரோல் எஞ்சின் மற்றும் மின்சார மோட்டாரை வெளிப்புறமாக மின்னேற்றம் செய்யக் கூடிய மின்கலத்துடன் ஒருங்கிணைக்கிறது, இது வழக்கமான கலப்பினங்களை விட நீண்ட தூரத்திற்கு மின்சார சக்தியில் மட்டுமே இயங்க அனுமதிக்கிறது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## உள்ளாட்சி அமைப்பு நிதிகளில் சீர்திருத்தம்

- தமிழ்நாட்டின் ஏழாவது மாநில நிதி ஆணையத்தின் (SSFC) தலைவர் கே. அலாவுதீன், சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல்

அதிகாரம், நிதி சுயாட்சி மற்றும் வளங்களை வழங்க வலியுறுத்தினார்.

- ❖ உள்ளாட்சி அமைப்புகள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பரிமாற்றங்களையே பெரிதும் சார்ந்துள்ளன.
- ❖ பல மாநிலங்களில் உள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் சொந்த ஆதாரங்களில் இருந்து வெறும் 1%–8% மட்டுமே வருவாயை ஈட்டுகின்றன.
- ❖ பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு (OECD) நாடுகளில் சொத்து வரி வசூல் 1.1% ஆக இருக்கும் நிலையில், இந்தியாவில் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2% ஆக உள்ளது.
- ❖ தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு உள்ளது, ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பெண் பிரதிநிதிகளின் துணைவர்கள் சில நேரங்களில் தங்கள் அதிகாரங்களை முறைசாரா முறையில் பயன்படுத்த முயல்கின்றனர்.
- ❖ TN-VETRI (தமிழ்நாடு கிராம அதிகாரம், மாற்றம் மற்றும் புத்துணர்ச்சி முன்னெடுப்பு) திட்டம் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஊரக வளர்ச்சித் துறை பகிர்ந்தளிக்கப்படும் நிதியை 10 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக உயர்த்தக் கோரியுள்ளது.





# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் தூய்மையான ஆற்றல் மைல்கல்

- ❖ தூய்மையான எரிசக்தி ஆதாரங்கள் மின்சாரத் தேவையின் உயர்வைப் பூர்த்தி செய்ததால், 50 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில் முதல் முறையாக இந்தியாவின் நிலக்கரி மின் உற்பத்தி இரண்டு ஆண்டுகளாக எந்த வளர்ச்சியையும் பதிவு செய்ய வில்லை.
- ❖ 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு (2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை) மற்றும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு (2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை) இடையே, மின் உற்பத்தி 7% அல்லது சுமார் 63 டெராவாட்-மணிநேரம் (TWh) அதிகரித்துள்ளது.
- ❖ இந்த முழுமையான அதிகரிப்பும் சூரிய ஒளி, காற்று, நீர் மின்சாரம் மற்றும் அணுசக்தி போன்ற புதைபடிவமற்ற எரிசக்தி ஆதாரங்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.
- ❖ இக்கால கட்டத்தில் இந்தியா சுமார் 77 ஜிகாவாட் சூரிய சக்தி, 11 ஜிகாவாட் காற்றாலை,

5 ஜிகாவாட் நீர்மின்சாரம் மற்றும் 0.6 ஜிகாவாட் அணுசக்தி திறனை சேர்த்துள்ளது.

- அதிக மின் தேவை இருந்தபோதிலும், 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் மின் துறையின் கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) உமிழ்வுகள் 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் அதே அளவிலேயே பரவலாக இருந்தது.
- இருப்பினும், முக்கியமாக எஃகு மற்றும் சிமெண்ட் போன்ற தொழில்களால் 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் ஒட்டு மொத்த இந்திய உமிழ்வுகள் 3.7% அதிகரித்து உள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-ஓமன் துறைமுக ஒத்துழைப்பு




- ஓமன் இந்திய வணிகர்களை சோஹார் துறைமுகத்தில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்து ள்ளது, இது ஹார்முஸ் நீர்ச்சந்தியில் இருந்து விலகி வளைகுடா எரிசக்தி வளங்களை அணுகுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.
- சோஹார் துறைமுகம் ஹார்முஸ் நீர்ச்சந்தியில் இருந்து தள்ளி ஓமனின் ஓமன் வளைகுடா கடற்கரையில் அமைந்துள்ளது.
- இது ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் கிழக்கு சவுதி அரேபியாவின் முக்கிய எரிசக்தி குழாய்களுக்கு அருகில் உள்ளது.
- இத்துறைமுகம் 30 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான முதலீடுகளைப் பெற்று

உள்ளதுடன் ஆண்டுதோறும் 72 மில்லியன் டன் சரக்குகளைக் கையாள்கிறது.

- இந்திய முதலீடு, வர்த்தகம் மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க சோஹார் துறைமுகம் மற்றும் அதன் தடையற்ற வர்த்தக மண்டலத்தை ஓமன் ஊக்குவித்து வருகிறது.
- முன்னதாக, ஓமன் துக்ம் மற்றும் சலாலா துறைமுகங்களை இந்தியாவிற்கு வழங்கி இருந்தது.
- வரவிருக்கும் ஓமன்-ஐக்கிய அரபு அமீரகம் ரயில் இணைப்பானது சோஹாரை ஐக்கிய அரபு அமீரகம் ரயில் கட்டமைப்புடன் இணைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தங்களில் ஜிபூட்டி இணைப்பு

- அமெரிக்க தலைமையிலான விண்வெளி ஒத்துழைப்பு கட்டமைப்பில் கையெழுத்திட்ட உலக அளவில் 72வது நாடாகவும் மற்றும் 8வது ஆப்பிரிக்க நாடாகவும் ஜிபூட்டி ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தங்களில் இணைந்துள்ளது.
- எரித்திரியா, எத்தியோப்பியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டு ஆப்பிரிக்காவின் கொம்பு பகுதியில் ஜிபூட்டி அமைந்துள்ளது.
- இது செங்கடல், ஏடன் வளைகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலை இணைக்கும் பாப் எல்-மண்டேப் நீர்ச்சந்திக்கு அருகில் அமைந்துள்ளது.
- கடல் மட்டத்திலிருந்து 155 மீ கீழே உள்ள அசல் ஏரியானது ஆப்பிரிக்காவின் மிகத் தாழ்வான புள்ளியாகும் மற்றும் உலகின் மிக அதிக உப்புத்தன்மை கொண்ட உள்நாட்டு நீர்நிலைகளில் ஒன்றாகும்.
- ஜிபூட்டியில் நிரந்தர மேற்பரப்பு ஆறுகள் எதுவும் இல்லை, மேலும் இது செங்கடல், ஏடன் வளைகுடா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க பிளவு அமைப்புகளின் சந்திப்பில் அமைந்துள்ளது.
- இதன் விண்வெளித் திட்டமானது 2020 ஆம் ஆண்டில் தொடங்கியது, மேலும் இது இரண்டு சுற்றுச்சூழல் கண்காணிப்பு நானோ செயற்கைக்கோள்களை தாழ்வான-பூமி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியுள்ளது.




## அமெரிக்காவின் போதைப்பொருள் கடத்தல் பட்டியல் 2027

- அமெரிக்கா தனது 2027 நிதியாண்டிற்கான முக்கிய போதைப்பொருள் கடத்தல்

அல்லது சட்டவிரோத போதைப்பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்த்துள்ளது.

- புவியியல், வர்த்தகம் மற்றும் பொருளாதார காரணிகளும் கருதப்படுவதால், இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவதானது போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவதில் தோல்வி என்று தானாகவே அர்த்தமாகாது.
- சட்டவிரோத அபின் சாகுபடிக்கு எதிரான இந்தியாவின் முயற்சிகள், வலுவான விநியோகச் சங்கிலிக் கட்டுப்பாடுகள் மற்றும் அமெரிக்க-இந்தியா போதைப்பொருள் கொள்கைக் கட்டமைப்பின் கீழ் உள்ள ஒத்துழைப்பு ஆகியவற்றை அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.
- ஃபெண்டானில், மெத்தாம்பேட்டமைன் மற்றும் பிற செயற்கை போதைப் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படும் முன்னோடி ரசாயனங்களின் முக்கிய ஆதாரமாக சீனா அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ஆப்கானிஸ்தான், பொலிவியா, பர்மா (மியான்மர்) மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகள் போதைப்பொருள் தடுப்பு கடமைகளை நிறைவேற்றுவதில் தெளிவாக தோல்வியடைந்த நாடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.




## பாரம்பரிய மருத்துவ அறிவு, மரபணு வளங்கள் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகள் குறித்த மூன்றாவது பிம்ஸ்டெக் மாநாடு


- பாரம்பரிய மருத்துவ அறிவு, மரபணு வளங்கள் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகள் குறித்த மூன்றாவது பிம்ஸ்டெக் மாநாடு கோவாவில் தொடங்கியது.
- இந்த மாநாட்டை இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது என்ற நிலையில் கோவாவில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் (AIIA) இதன் ஒருங்கிணைப்பு நிறுவனமாகச் செயல்படுகிறது.
- பாரம்பரிய மருத்துவ அறிவு, மரபணு வளங்கள் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகள் குறித்த பிம்ஸ்டெக் ஒருங்கிணைப்புக் குழுவின் இரண்டாவது கூட்டத்துடன் இது நடத்தப் படுகிறது.
- பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளான வங்கதேசம், பூட்டான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியவற்றின் பிரதிநிதிகள் தத்தமது தேசியக் கொள்கைகள், சட்டக் கட்டமைப்புகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

*பிம்ஸ்டெக் பற்றி*

- இதன் தலைமைப் பதவிகள் நாடுகளின் பெயர்களின் அகர வரிசைப்படி சுழற்சி

முறையில் வழங்கப் படுகின்றன.

- ❖ இதன் நிரந்தரச் செயலகம் வங்கதேசத்தின் டாக்காவில் அமைந்துள்ளது.
- ❖ இது தெற்காசியாவையும் தென்கிழக்கு ஆசியாவையும் இணைக்கும் ஒரு உத்திசார் பிராந்தியப் பாலமாகச் செயல்படுகிறது.
- ❖ பிம்ஸ்டெக், சார்க் மற்றும் ஆசியான் பிராந்தியக் கூட்டமைப்புகளை இணைக்கும் ஒரு உத்திசார் புவியியல் மற்றும் பொருளாதாரப் பாலமாகச் செயல்படுகிறது.




## இந்தியா-வியட்நாம் நட்புறவு ஆண்டு – 2027




- ❖ இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய இரு நாடுகளும் தங்களின் இருதரப்பு தூதரக உறவுகளின் 55வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், அடுத்த ஆண்டை "இந்தியா-வியட்நாம் நட்புறவு ஆண்டாக" அனுசரிக்க ஒப்புக்கொண்டுள்ளன.
- ❖ இந்தியாவைப் பொறுத்தவரை, வியட்நாம், இந்தியாவின் 'ஆக்ட் ஈஸ்ட்' கொள்கையிலும், இந்தோ-பசிபிக் கண்ணோட்டத்தில் இந்தியாவின் 'மகாசாகர்' (பிராந்தியங்கள் முழுவதும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பர மற்றும் முழுமையான முன்னேற்றம்) தொலைநோக்குப் பார்வையிலும் ஒரு முக்கியப் பங்காளியாகும்.
- ❖ ஆசியான் (தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம்) உடனான நமது விரிவான

உத்திசார் கூட்டாண்மை கட்டமைப்பிலும் வியட்நாம் ஒரு முக்கியப் பங்காளியாகும்.

- இரு நாடுகளும் தங்களது உறவை மேம்படுத்தப்பட்ட விரிவான உத்திசார் கூட்டாண்மை நிலைக்கு உயர்த்தியுள்ளன.
- இப்பிராந்தியத்தில் அந்த மட்டத்தில் நாம் இருதரப்பு உறவுகளைக் கொண்டுள்ள முதல் நாடு வியட்நாம் ஆகும்.
- பிரம்மோஸ் மீயொலி சீர்வேக எறிகணைகளை வழங்குவதற்காக வியட்நாமுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.
- இந்தியா மற்றும் வியட்நாம் இடையேயான இருதரப்பு கூட்டு ராணுவப் பயிற்சிக்கு 'எக்சர்சைஸ் வின்பாக்ஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செயற்கை சூரியன் திட்டம் – இந்தியா




- குஜராத்தில் உள்ள பிளாஸ்மா ஆராய்ச்சி நிறுவனத்தில் (IPR) SST-1 டோகாமாக்கில் புதிய 82.6 GHz, 400 kW கைரோட்ரானை நிறுவியதன் மூலம் இந்தியாவின் இணைவு ஆராய்ச்சி முன்னேற்றம் அடைந்துள்ளது.
- SST-1 (நிலையான-நிலை மீக்கடத்து டோகாமாக்-1) என்பது இணைவு ஆராய்ச்சிக்காக காந்தரீதியாக வரையறுக்கப்பட்ட சூடான பிளாஸ்மாவை ஆய்வு செய்யும் ஒரு சோதனை இயந்திரமாகும்.
- புதிய கைரோட்ரான் ஆனது எலக்ட்ரான் சைக்ளோட்ரான் ஒத்ததிர்வு வெப்பமூட்டல் (ECRH) சோதனைகளுக்கு 400 kW வரையிலான ரேடியோ அதிர்வெண் (RF) ஆற்றலை வழங்குகிறது.
- SST-1 ஏற்கனவே சூரியனின் மையப்பகுதியை விட மிகவும் வெப்பமான 200 மில்லியன் டிகிரி செல்சியஸிற்கும் அதிகமான பிளாஸ்மா வெப்பநிலையை அடைந்துள்ளது.
- இந்த அமைப்பானது ஏற்கனவே உள்ள 42 GHz, 500 kW ECRH அமைப்புடன் இணைந்து

செயல்படுகிறது, இது அறிவியலாளர்களுக்கு பிளாஸ்மா வெப்பமாக்கல், கட்டுப்பாடு மற்றும் நிலைத் தன்மையை ஆய்வு செய்ய உதவுகிறது.

## புதன் கோள் குறித்த புதிய ஆய்வு

- புதன் கோளின் உட்புறம் பல பில்லியன் ஆண்டுகளாக குளிர்ந்ததால், அது முந்தைய மதிப்பீடுகளை விட 10–30% அதிகமாகச் சுருங்கியிருக்கலாம் என்று ஒரு புதிய ஆய்வு கூறுகிறது.
- புதன் கோளின் உட்புறம் குளிர்ந்து சுருங்கியதன் காரணமாக அதன் ஆரம் சுமார் 7.2 மைல்கள் (11.6 கி.மீ) குறைந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகின்றனர்.
- புதன் கோளின் மேற்பரப்பு கடினத்தன்மையை வரைபடமாக்குவதற்கு நாசாவின் மெசஞ்சர் (MESSENGER) திட்டத்தின் தரவுகளை இந்த ஆய்வு பயன்படுத்தியது.
- சிறுகோள்கள் மற்றும் வால்மீன்களின் தாக்கத்தினால் ஏற்பட்ட துகள்கள் புதன் கோள் சுருங்கியதால் ஏற்பட்ட சில பாறைகள், சுருக்கங்கள் மற்றும் முகடுகளை மறைத்திருக்கலாம்.
- புதன் கோளின் சுருக்கமானது அதன் உலோக மையப்பகுதி, உட்புற அமைப்பு, புவியியல் வரலாறு மற்றும் காந்தப்புலம் பற்றிய தடயங்களை வழங்கக் கூடும்.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## பருவநிலையைத் தாங்கும் திறன் கொண்ட மோத் பீன்/நரிப்பயறு

- நான்கு CAZRI மோத் பீன்/நரிப்பயறு ரகங்கள் மேற்கு ராஜஸ்தானில் 2026 ஆம் ஆண்டு காரிஃப் பருவத்தின் போது நீடித்த 35 நாள் வறட்சியைத் தாங்கின.
- ஜோத்பூரில் உள்ள ICAR-மத்திய வறண்ட மண்டல ஆராய்ச்சி நிறுவனம் (CAZRI) வறண்ட நிலைகளுக்காக CAZRI Moth-4, 5, 6 மற்றும் 7 ஆகியவற்றை உருவாக்கியது.
- பூக்கள் மற்றும் காய் உருவாகும் போது குறைந்த மண் ஈரப்பதம் இருந்தபோதிலும், இந்த ரகங்கள் பசுமையான வளர்ச்சியையும் அபரிமிதமான காய் வளர்ச்சியையும் பராமரித்தன.

- அவற்றின் வளர்ச்சி நெகிழ்வுத்தன்மை விதைத்த சுமார் 30 நாட்களுக்குப் பிறகு பூப்பதற்கும், மண் ஈரப்பதம் கிடைப்பதற்கேற்ப வளர்ச்சி மற்றும் முதிர்ச்சியை சரி செய்யவும் அனுமதிக்கிறது.
- சரியான நேரத்தில் விதைத்தல், உகந்த தாவர இடைவெளி, களை மேலாண்மை மற்றும் ஈரப்பதத்தைப் பாதுகாக்கும் நடைமுறைகள் அவற்றின் செயல்திறனை ஆதரித்தன.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உணவுக்கான காடுகள்: மக்களுக்கு ஊட்டமளித்தல், புவியை நிலை நிறுத்துதல் அறிக்கை

- 'உணவுக்கான காடுகள்: மக்களுக்கு ஊட்டமளித்தல், புவியை நிலைநிறுத்துதல்' என்ற அறிக்கை, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பால் (FAO) வெளியிடப் பட்டது.
- இது லேண்ட்ஸ்கேப் அலையன்ஸ் உடன் இணைந்து உருவாக்கப்பட்டது.
- இது பசி மற்றும் வறுமையைக் குறைப்பதில் காடுகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது மற்றும் வேளாண் உணவு அமைப்பு கொள்கைகளில் அவற்றைச் சேர்க்குமாறு நாடுகளை வலியுறுத்துகிறது.
- உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தில் (FSN) வன உணவுகளின் பங்களிப்பில் உள்ள பிராந்திய வேறுபாடுகளை இந்த அறிக்கை எடுத்துக்காட்டியது.
- ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில், சில சமூகங்கள் தங்கள் தினசரி புரதத்தில் 80 சதவீதம் வரை காட்டு இறைச்சியிலிருந்து பெறுகின்றன.
- அமேசான் காடுகளில், எடையின் அடிப்படையில் உட்கொள்ளப்படும் மொத்த உணவில் 44 சதவீதம் மீன்களாகும்; இவற்றுடன் காட்டு இறைச்சி, பிரேசில் கொட்டைகள் மற்றும் அசாய் பெர்ரிகளும் உள்ளன.

- ஐரோப்பாவில், 28 நாடுகளை உள்ளடக்கிய ஒரு கணக்கெடுப்பில், பதிலளித்தவர்களில் 90 சதவீதம் பேர் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது ஒரு காட்டு உணவையாவது உட்கொள்கின்றனர், அதே நேரத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் ஆண்டுதோறும் வேட்டை இறைச்சியை உண்கின்றனர்.
- வட அமெரிக்காவில், காட்டு இறைச்சி வாழ்வாதாரத்தை விட பொழுது போக்கிற்காகவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது.
- இந்தியாவின் பழங்குடிச் சமூகங்கள் காட்டு உணவுகளைப் பெருமளவில் பயன்படுத்துகின்றனர்.
- அதே சமயம், அதிக வனப்பகுதி உள்ள இடங்களில் வாழும் குழந்தைகள் பலதரப்பட்ட உணவுகளை உட்கொள்வதோடு, வளர்ச்சி குன்றல் விகிதமும் குறைவாக இருப்பதாக ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.
- கிழக்கு இந்தியாவில் நடத்தப்பட்ட மற்றொரு ஆய்வில், காட்டு உணவுகளை (பெரும்பாலும் காடுகளில் இருந்து பெறப்படுபவை) உட்கொள்வது, குறிப்பாகப் பற்றாக்குறைக் காலத்தில், பெண்களிடையே அதிக உணவுப் பன்முகத் தன்மை மதிப்பெண்களுடன் தொடர்புடையதாகக் கண்டறியப்பட்டது.




# மாநிலச் செய்திகள்

## லடாக்கின் முதல் பாரம்பரிய கிராமம் - குமிக்


- சான்ஸ்காரில் உள்ள குமிக் கிராமமானது 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று லடாக்கின் முதல் பாரம்பரிய கிராமமாக அறிவிக்கப்பட்டது.
- குமிக் கிராமமானது பாரம்பரிய மண் வீடுகள், புனித இடங்கள், விவசாய நடைமுறைகள் மற்றும் பௌத்த மரபுகளுக்கு பெயர் பெற்றது.

- இந்தக் கிராமத்தில் திபெத்தியப் பாரம்பரியத்தில் நியமன பௌத்த நூல்களின் தொகுப்பான கஞ்சூர் கையெழுத்துப் பிரதிகள் உள்ளன.
- சான்ஸ்கார் என்பது திபெத்திய பௌத்த மடாலயங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் வாய்வழி மரபுகளுக்குப் பெயர் பெற்ற அதிக உயரமான இமயமலைப் பகுதி ஆகும்.
- பாரம்பரிய கிராமம் என்ற அந்தஸ்து பாரம்பரிய கட்டிடக்கலை, கலாச்சார நடைமுறைகள் மற்றும் உள்ளூர் பாரம்பரியத்தை பாதுகாப்பதை ஆதரிக்கிறது.




# முக்கிய தினங்கள்

## சமூக நீதி தினம் 2026 - செப்டம்பர் 17




- சமூக சீர்திருத்தவாதி ஈ.வெ. ராமசாமியின் (பெரியார்) பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் செப்டம்பர் 17 அன்று தமிழ்நாடு சமூக நீதி நாளைக் கடைப்பிடித்தது.
- பெரியார் என்று பிரபலமாக அறியப்படும் ஈ.வெ. ராமசாமி, 1879 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று ஈரோட்டில் பிறந்தார்.
- அவர் சமூக சமத்துவம், கண்ணியம் மற்றும் சுயமரியாதை ஆகியவற்றை மையமாகக் கொண்டு 1925 ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.
- தீண்டாமை மற்றும் சாதிய பாகுபாட்டை எதிர்த்த வைக்கம் சத்தியாகிரகத்தில் பெரியார் பங்கேற்றார்.

- உரைகள், எழுத்துக்கள் மற்றும் பொதுப் பிரச்சாரங்கள் மூலம் பகுத்தறிவு, பெண்கள் உரிமை, கல்வி மற்றும் சமூக சமத்துவம் ஆகியவற்றை அவர் ஆதரித்தார்.
- 2026 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அவரது 147 ஆவது பிறந்தநாளை சமூக நீதி தினத்தை உறுதிமொழியுடன் கடைப் பிடித்தது.

# இதரச் செய்திகள்

## இந்தியாவில் கல்வி சுதந்திரம்

- ஸ்காலர்ஸ் அட் ரிஸ்க் (Scholars at Risk) அமைப்பின் ஃப்ரீ டு திங்க் (Free to Think) 2026 அறிக்கையானது இந்தியாவின் கல்வி சுதந்திரம் தொடர்ந்து கடுமையாகக் கட்டுப்படுத்தப் பட்ட பிரிவிலேயே இருப்பதாகக் கூறியுள்ளது.
- ஹாங்காங், இந்தோனேசியா, பாகிஸ்தான், மேற்குக் கரை மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளுடன் இந்தியாவும் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட குழுவில் வைக்கப்பட்டு உள்ளது.
- இந்தியாவின் கல்வி சுதந்திரக் குறியீடு (AFI) மதிப்பெண் 2015 ஆம் ஆண்டில் 0.41 ஆக இருந்ததிலிருந்து 2026 ஆம் ஆண்டில் 0.14 ஆகக் குறைந்துள்ளது.
- கல்வி சுதந்திரக் குறியீடானது (AFI) வளாகத்தின் ஒருமைப்பாடு, கல்வி வெளிப்பாடு, ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல் சுதந்திரம் மற்றும் நிறுவன சுயாட்சி போன்ற காரணிகளை அளவிடுகிறது.
- இந்த அறிக்கையானது 2025 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் 2026 ஆம் ஆண்டு ஜூன் 30 வரை 59 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் 382 தாக்குதல்களைப் பதிவு செய்துள்ளது.
- வன்முறை, சிறைவாசம் அல்லது கல்விப் பதவிகளை இழப்பது தொடர்பான 42 வழக்குகளுடன் இந்தியா அதிக எண்ணிக்கையிலான தாக்குதல்களைப் பதிவு செய்து ள்ளது.
- கடந்த தசாப்தத்தில் 179 நாடுகளில் 50 நாடுகள் கல்வி சுதந்திரத்தில் கணிசமான சரிவைச் சந்தித்துள்ளன என்று அந்த அறிக்கை கூறியுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★